RNI-N0: TNTAM/2021/83936
Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI
தமிழால் வெல்வோம்
DAILY EVENING
மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 322 | நவம்பர்.22 2025 சனிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

## பெண்கள் குறித்த சர்ச்சை பேச்சு விவகாரம்: சி.வி.சண்முகம் மீது குற்றவியல் நடவடிக்கை எடுக்க இடைக்கால தடை



சென்னை, நவ.22-

பெண்கள் குறித்த சர்ச்சை பேச்சு தொடர்பாக அதிமுக முன்னாள் அமைச்சர் சி.வி.சண்முகத்துக்கு எதிராக குற்றவியல் நடவடிக்கை எடுக்குமாறு மகளிர் ஆணையம் பிறப்பித்த உத்தரவுக்கு உயர் நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்துள்ளது.

விழுப்புரத்தில் சில மாதங்களுக்கு முன்பு நடந்த அதிமுக பூத் கமிட்டி கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் சி.வி. சண்முகம் எம்.பி., பெண்கள் குறித்து சர்ச்சைக்குரிய வகையில் பேசியதாக குற்றச்சாட்டு எழுந்தது.

இதுதொடர்பாக சென்னையை சேர்ந்த பிரமிளா, ராதிகா ஆகியோர் கொடுத்த புகாரின்பேரில் விசாரணை மேற்கொண்ட மாநில மகளிர் ஆணையம், சி.வி.சண்முகத்துக்கு எதிராக குற்றவியல் நடவடிக்கை எடுக்குமாறு டிஜிபிக்கு கடந்த நவ.11ம் தேதி உத்தரவிட்டது. இதை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றத்தில் அவர் மனு தாக்கல் செய்தார். நீதிபதி ஏ.டி.ஜெகதீஷ் சந்திரா முன்பு இந்த மனு நேற்று விசாரணைக்கு வந்தது.

அப்போது நடந்த வாதம்:

சி.வி.சண்முகம் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர்கள் முகமது ரியாஸ், சி.அய்யப்பராஜ்: மனுதாரருக்கு மாநில மகளிர் ஆணையம் அனுப்பிய சம்மனில், புகார் கொடுத்த 2 பெண்களின் பெயர்களைத் தவிர வேறு எந்த விவரங்களும், ஆதாரங்களும் தெரிவிக்கப்படவில்லை.

மனுதாரர் கடந்த ஓராண்டுக்கும் மேலாக சென்னையில் எந்த கூட்டத்திலும் பங்கேற்று பேசாத நிலையில், சென்னையை சேர்ந்த பெண்கள் கொடுத்த புகாரின்பேரில் மகளிர் ஆணையம் உத்தரவிட்டது ஏற்புடையதல்ல. பெண்களுக்கு எதிராக அவர் ஒருபோதும் சர்ச்சைக்குரிய வகையில் பேசவில்லை.

கடந்த அக்.28ம் தேதி விசாரணைக்கு ஆஜராகுமாறு அனுப்பிய சம்மன் முந்தைய நாள்தான் கிடைத்தது. மனுதாரருக்கு எதிராக குற்றவியல் வழக்கு பதிவு செய்யுமாறு உத்தரவிட மகளிர் ஆணையத்துக்கு அதிகாரம் கிடையாது.

காவல் துறை தரப்பில் ஆஜரான கூடுதல் குற்றவியல் வழக்கறிஞர் கேஎம்டி. முகிலன்: மகளிர் ஆணையம் இதுதொடர்பாக தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளதால், இந்த மனு விசாரணைக்கு உகந்தது அல்ல. இதுதொடர்பான விவரங்களைப் பெற்று சரி பார்க்க வேண்டி இருப்பதால் உரிய அவகாசம் வழங்க வேண்டும்.

இவ்வாறு வாதம் நடந்தது. இதையடுத்து, மகளிர் ஆணைய உத்தரவுக்கு நீதிபதி இடைக்காலத் தடை விதித்தார். காவல் துறை தரப்பில் பதில் அளிக்க உத்தரவிட்டு, விசாரணையை அடுத்த வாரத்துக்கு தள்ளிவைத்தார்.

## நெல் ஈரப்பதம், விவசாயிகள் நிவாரணம் விவகாரம்: திமுக கூட்டணிக் கட்சிகள் தஞ்சை, திருவாரூரில் ஆர்ப்பாட்டம் அறிவிப்பு



சென்னை: நவ.22-

நெல் ஈரப்பத அளவை அதிகரிக்காமல், நிவாரணமும் அளிக்காமல் டெல்டா விவசாயிகளை வஞ்சிக்கும் ஒன்றிய பாஜக அரசைக் கண்டித்து 'மதச் சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சி'களின் சார்பில் தஞ்சாவூர் மற்றும் திருவாரூரில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து வெளியிடப்பட்டிருக்கும் அறிக்கையில், "கொள்முதலில் ஈரப்பதம் தளர்வு தொடர்பான தமிழ்நாட்டின் கோரிக்கையை நிராகரித்துள்ளது ஒன்றிய பாஜக. அரசு. கனமழை காரணமாக ஈரப்பதம் அதிகமாகியுள்ள நெல்லினைக் கொள்முதல் செய்ய வேண்டும் என்ற தமிழ்நாட்டின் குரல் பிரதமரின் காதுகளுக்குக் கேட்கவில்லை.

கன மழையால் பாதிக்கப்பட்ட பயிர்களுக்குக் கோரப்பட்ட நிவாரணமும் அளிக்காமல், ஈரப்பத அளவையும் அதிகரிக்காமல் தமிழ்நாட்டின் டெல்டா விவசாயிகளை வஞ்சித்து வாழ்வாதாரத்தை கேள்விக்குறியாக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்தும், தமிழ்நாட்டின் கோரிக்கைகளை உடனடியாக மறுபரிசீலனை செய்து வேளாண் பெருங்குடி மக்களுக்கு ஒன்றிய அரசு நன்மை செய்திட வேண்டும் என வலியுறுத்தியும் 23.11.2025 அன்று தஞ்சாவூரிலும், 24.11.2025 அன்று திருவாரூரிலும் காலை 10.00 மணியளவில் 'மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி' சார்பில் "மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்" நடைபெறும்" இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கழிவுப் பஞ்சு விலை உயர்வால் உற்பத்தியை 50% குறைக்க ஓஇ மில்கள் முடிவு



சென்னை, நவ.22-

கிரே நூல் தயாரிக்கும் ஓபன் எண்ட் (ஓஇ) நூற்பாலைகளில் முக்கிய மூலப்பொருளான கழிவுப் பஞ்சு விலை தொடர்ந்து உயர்ந்து வருவதால் நெருக்கடியை எதிர்கொள்ள முடியாமல் உற்பத்தியை 50 சதவீதம் குறைக்க தொழில்துறையினர் முடிவு செய்துள்ளனர்.

தமிழ்நாட்டில் மொத்தம் 600 ஓஇ (கிரே நூல், கலர் நூல் இரண்டு தயாரிக்கும்) நூற்பாலைகள் உள்ளன. இவற்றில் 2.5 லட்சம் பேர் வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர். ஸ்பின்னிங் நூற்பாலைகளில் இருந்து பெறப்படும் கழிவுப் பஞ்சை முக்கிய மூலப்பொருளாக கொண்டு செயல்படும் 200(கிரே நூல் மட்டும் தயாரிக்கும்) 'ஓஇ' நூற்பாலைகளில் 50 ஆயிரம் பேர் வேலைவாய்ப்பு பெற்றுள்னர். கழிவுப் பஞ்சு விலை தொடர்ந்து உயர்ந்து வருவதால் கடும் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளதாக தொழில்துறையினர் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து மறுசுழற்சி ஜவுளித் தொழில்கள் கூட்டமைப்பின் (ஆர்டிஎப்) தலைவர் ஜெயபால் மற்றும் தமிழ்நாடு ஓபன் எண்ட் நூற்பாலைகள் சங்க(ஓஸ்மா) தலைவர் அருள்மொழி ஆகியோர் 'இந்து தமிழ் திசை' நாளிதழ் செய்தியாளரிடம் கூறியதாவது: மத்திய அரசு, ஸ்பின்னிங் நூற்பாலைகள் பயன்பெறும் வகையில் பருத்திக்கு இறக்குமதி வரி 11 சதவீதத்தை டிசம்பர் இறுதி வரை ரத்து செய்துள்ளது. இதனால் பஞ்சு விலை குறைந்துள்ளது. அதேபோல் பாலியஸ்டர், விஸ்கோஸ் போன்ற செயற்கை இழைகளுக்கு முன் அமல்படுத்தப்பட்ட தரக்கட்டுப்பாடு உத்தரவையும் மத்திய அரசு நீக்கியுள்ளது.

இதனால் மேற்குறிப்பிட்ட மூலப்பொருட்கள் விலை சர்வதேச சந்தை விலையில் கிடைக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இத்தகைய சலுகைகளை பெற்றுக் கொண்ட ஸ்பின்னிங் நூற்பாலை தொழில்துறையினர் வெளியேற்றப்படும் கழிவுப் பஞ்சை கொண்டு லட்சக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கி வரும் 'ஓஇ' நூற்பாலைகள் பாதிக்கும் வகையில் விலையை தொடர்ந்து உயர்த்தி வருவது ஏற்புடையதல்ல.

தற்போது ஒரு கிலோ ரூ.100 ஆக இருக்க வேண்டிய கழிவுப் பஞ்சு(கோப்பர் நாயில் ரகம்) ரூ.108ஆக உயர்ந்துள்ளது. சாதாரண பஞ்சு விலை ஒரு கேண்டி ரூ. 6,000 குறைந்த நிலையில் கடந்த இரண்டு மாதங்களில் மட்டும் கழிவுப் பஞ்சு விலை ஒரு கிலோவிற்கு ரூ.8 வரை உயர்த்தியுள்ளனர்.

மேலும் விலை தொடர்ந்து உயர்த்தப்பட வாய்ப்பு உள்ளது. ஜவுளி சங்கிலித் தொடரிலுள்ள ஒரு பிரிவு தொழில்துறையை (ஓஇ) முற்றிலும் பாதிக்கக்கூடிய செயலாகும். கழிவுப் பஞ்சு விலை தொடர்ந்து உயர்ந்து வருவதால் நெருக்கடியை எதிர்கொள்ள முடியாமல் உற்பத்தியை 50 சதவீதம் குறைக்கு 'ஓஇ' தொழில்துறையினர் முடிவு செய்துள்ளனர்.

கடந்த 3 ஆண்டுகளில் 60 'ஓஇ' நூற்பாலை தொழில்துறையினர் நெருக்கடியை எதிர்கொள்ள முடியாமல் நலிவடைந்து தொழிலை விட்டு வெளியேறியுள்ளனர். கழிவுப் பஞ்சு விலையை ஸ்பின்னிங் நூற்பாலை நிர்வாகத்தினர் குறைப்பது மட்டுமே இப்பிரச்சினைக்கு தீர்வாகும். இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

## 23 கட்டணமில்லா சேவைகளுக்கு ரூ.117 கோடி செலவு: பழநி கோயில் தேவஸ்தானம் தகவல்



பழநி, நவ.22-

பழநி தண்டாயுதபாணி சுவாமி கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கு தேவஸ்தானம் மூலம் நாள் முழுவதும் அன்னதானம், பஞ்சாமிர்த பிரசாதம் வழங்குதல், கிரிவலப் பாதையில் பக்தர்கள் செல்வதற்காக பேட்டரி கார்கள் வசதி உள்ளிட்ட 23 இனங்களின் கீழ் கட்டணமில்லா சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில், கடந்த 2021 மே 7 முதல் 2025 அக்.31 வரை கடந்த நான்கரை ஆண்டுகளில் நாள் முழுவதும் அன்னதான திட்டத்துக்கு ரூ.41.53 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் 97.50 லட்சம் பக்தர்கள் பயனடைந்துள்ளனர்.

இதேபோல், இலவசமாக முடிகாணிக்கை செலுத்துவதற்கு ரூ.21.08 கோடி செலவாகியுள்ளது. இத்திட்டத்தில் 46.86 லட்சம் பக்தர்கள் பயனடைந்துள்ளனர். முதலுதவி சிகிச்சை மருத்துவ மனைக்கு ரூ.1.53 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது. இங்கு 2.94 லட்சம் பக்தர்கள் சிகிச்சை பெற்றுள்ளனர்.

தேவஸ்தான கட்டுப்பாட்டில் உள்ள பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கு காலை சிற்றுண்டி வழங்கும் திட்டத்துக்கு ரூ.7.70 கோடி செலவு செய்யப்பட்டதில், 8.75 லட்சம் மாணவ, மாணவிகள் பயனடைந்துள்ளனர். நாள் முழுவதும் பிரசாதம் வழங்கும் திட்டத்துக்கு ரூ.1.87 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம், 5.84 லட்சம் பக்தர்கள் பயனடைந்துள்ளனர்.

கைக்குழந்தைகளுக்கு காய்ச்சிய பால், இலவச திருமணம், காலணி பாதுகாப்பகம் உள்ளிட்ட கட்டணமில்லா சேவைகளுக்கு மொத்தமாக ரூ.117 கோடியே 72 லட்சத்து 40 ஆயிரத்து 913 செலவாகியுள்ளது. இதன்மூலம் கோடிக் கணக்கான பக்த ர்கள் பயனடைந்துள்ளனர் என, தேவஸ்தான நிர்வாகம் அறிவித்துள்ளது.

## ஆதரவற்ற முதியோர் இல்லத்தை இடிக்க முயற்சி: அமைச்சர் தா.மோ.அன்பரசனுக்கு சீமான் கண்டனம்

சென்னை, நவ.22-

ஆலந்தூரில் தொண்டு நிறுவனம் நடத்தி வரும் ஆதரவற்ற முதியோர் இல்லத்தை இடிக்க முயல்வதாக, அமைச்சர் தா.மோ.அன்பரசனுக்கு நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கை: சென்னை ஆலந்தூர் அய்யப்பந்தாங்கல் பரணிபுதூர் கல்லூரி சாலையில் இயங்கிவரும் 'லிட்டில் டிராப்ஸ்' ஆதரவற்ற முதியோர் இல்லத்தை இடித்துவிடுவேன் என அமைச்சர் தா.மோ.அன்பரசன் மிரட்டல் விடுக்கும் காணொளி பெரும் அதிர்ச்சியளிக்கிறது. அன்னை தெரசாவால் தொடங்கி வைக்கப்பட்டு கடந்த 35 ஆண்டுகளாக இயங்கிவரும் இந்த ஆதரவற்ற முதியோர் இல்லத்தில் 400க்கும் மேற்பட்ட முதியோர் பயன்பெற்று வரும் நிலையில், அதை இடித்துவிடுவேன் என ஓர் அமைச்சரே மிரட்டல் விடுத்திருப்பது கண்டனத்துக்குரியது.

முதியோர் இல்லத்தைச் சுற்றி அடுக்குமாடிக் குடியிருப்புகளை கட்டி விற்பனை செய்துள்ள தனியார் கட்டுமான பெரு நிறுவனம், முதியோர் இல்லத்தை இடித்து அதன் வழியாகக் கழிவுநீர் கால்வாய் அமைக்க முயல்வதாகவும், அதற்கு அமைச்சர் துணை நிற்பதாகவும் குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

தனியார் பெரு முதலாளிகளின் லாப நோக்கத்துக்காக, முதியோர் இல்லத்தை முடக்குவது ஏற்புடையதல்ல. திமுக அரசு தனியார் கட்டுமான நிறுவனத்துக்கு ஆதரவாகச் செயல்படுவதை கைவிட்டு, ஆதரவற்ற முதியோர் இல்லத்தை இடிக்கும் முயற்சியைக் கைவிட வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## ரோடு ஷோக்களில் பங்கேற்கும் மக்களின் பாதுகாப்புக்கு அரசியல் கட்சியினரே பொறுப்பு: தமிழ்நாடு அரசு அறிவிப்பு



சென்னை, நவ.22-

ரோடு ஷோக்களில் பங்கேற்கும் மக்களின் பாதுகாப்புக்கு அரசியல் கட்சியினரே பொறுப்பு என தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.ரோடு ஷோகளுக்கான நிலையான வழிகாட்டு நெறிமுறைகளை உருவாக்குவதற்காக தொடங்கப்பட்ட வழக்குகளின் விசாரணை சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி ஸ்ரீவட்சலா, நீதிபதி அருள் முருகன் அமர்வு முன்பு இன்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. இதை அடுத்து வரைவு வழிகாட்டு நெறிமுறைகளை தமிழக அரசின் கூடுதல் தலைமை வழக்கறிஞர் ஜே.ரவீந்திரன் இன்றைய தினம் தாக்கல் செய்தார். அப்போது மனுதாரர்கள் தரப்பு கட்சிகள் அதன் நகல் வழங்க வேண்டும் என்றும் தங்களுடைய கருத்துகளை பதிவு செய்ய வேண்டும் என்றும் தெரிவித்திருந்தனர். ஆனால் அதற்கு தமிழக அரசின் தலைமை வழக்கறிஞர் கடும் எதிர்ப்பு தெரிவித்தார். அவ்வாறு செய்தால் தொடர்ந்து நீண்டுகொண்டே போகும். இதற்கு முடிவு ஏற்படாது போன்ற வாதத்தை முன்வைத்தார். தொடர்ந்து இரு தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி அவர்களுக்கு நகலை வழங்க உத்தரவிட்டு இது தொடர்பாக வியாழக்கிழமை இறுதி முடிவு எடுக்கப்படும் என தெரிவித்தார். மேலும் தமிழக அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பொதுக்கூட்டங்கள், ரோடு ஷோ நிகழ்ச்சி தொடர்பான வழிகாட்டுதல் நெறிமுறைகளை அரசு ஐகோர்ட்டில் தாக்கல் செய்தது. அதில்,

*ரோடு ஷோக்களில் பங்கேற்கும் மக்களின் பாதுகாப்புக்கு அரசியல் கட்சியினரே பொறுப்பு.

* பொதுக்கூட்டங்களை முறைப்படுத்தவும் கண்காணிக்கவும் நெறிமுறைகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக அரசு பதில்.

*5,000 பேருக்கு மேல் கூடும் பொதுக்கூட்டங்கள், ஆர்ப்பாட்டம், போராட்டங்களுக்கு வழிகாட்டு நெறிமுறைகள் பொருந்தும்.

*5,000 பேருக்கு குறைவாக திரளும் கூட்டங்களுக்கு வழிகாட்டு நெறி முறைகள் பொருந்தாது எனவும் தமிழ்நாடு அரசு தெரிவித்துள்ளது.

*வழிபாட்டு தலங்களில் நடைபெறும் மத ரீதியான கூட்டங்களுக்கும் நெறிமுறைகள் பொருந்தும்.

*தேர்தல் நேரங்களில் தேர்தல் ஆணையம் வெளியிடும் விதிகள் மட்டுமே அமலில் இருக்கும்.

*ரோடு ஷோ, ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் முன் என்ன தேதி, நேரம், எவ்வளவு பேர் பங்கேற்பார்கள் என விண்ணப்பிக்க வேண்டும்.

*ரோடு ஷோக்களை பொருத்தவரை பிரச்சாரத்தை துவங்கும் இடம், முடிக்கும் இடங்களை குறிப்பிட்டு தாக்கல் செய்ய வேண்டும்.

* ரோடு ஷோ நடைபெற உள்ள இடங்களை காவல் அதிகாரிகள், கட்சிகளுடன் ஆலோசித்து ஆட்சியர் முடிவெடுப்பார்.

*50,000 பேருக்கு மேல் திரளும் கூட்டங்களுக்கு 30 நாட்களுக்கு முன் அனுமதி கேட்டு விண்ணப்பிக்க வேண்டும்.

*நிகழ்ச்சிகளுக்கு 10 நாட்களுக்கு முன் அனுமதி கேட்டு விண்ணப்பிக்க வேண்டும்.

* திடீரென நடக்கும் போராட்டங்களை பொருத்தவரை ஆட்சியருக்கும் காவல் ஆணையருக்கு முடிவெடுக்கும் அதிகாரம் தரப்பட்டுள்ளது.

* விண்ணப்பத்தில் ஆம்புலன்ஸ் உள்ளிட்ட மருத்துவ வசதிகள் ஏற்பாடு செய்த விவரங்களை தெரிவிக்க வேண்டும்.

* நிகழ்ச்சிக்கு அனுமதிக்கப்பட்ட நேரங்களை கண்டிப்புடன் பின்பற்ற வேண்டும்.

* கர்ப்பிணிகள், முதியோர்கள், குழந்தைகள், மாற்றுத்திறனாளிகளை நீண்ட நேரம் காத்திருக்க வைக்க கூடாது.

* நிகழ்ச்சி துவங்குவதற்கு 2 மணி நேரத்துக்கு முன்பே நிகழ்ச்சி நடக்கும் இடத்தில் கூடுவதை தவிர்க்க வேண்டும்.என தெரிவிக்கப்பட்டுள்ளது.




## வேலூர் மாவட்ட ஆட்சியராக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சியர் தலைமையில் அரசியல் கட்சி பிரமுகர்களுடன் எஸ் ஐ ஆர் குறித்த ஆலோசனைக் கூட்டம்


வேலூர், நவ.22-

வேலூர் மாவட்டம், வேலூர் தாலூகா, சத்துவாச்சாரி, ஆட்சியர அலுவலக கூட்டரங்கில், வேலூர் மாவட்டத்தில் வாக்காளர் சிறப்பு தீவிர திருத்தம் (ஷிமிஸி) குறித்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுடனான ஆலோசனைக் கூட்டம், மாவட்ட தேர்தல் அலுவலரும் / மாவட்ட ஆட்சிருமான சுப்புலட்சுமி தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் மா.சிவசுப்பிரமணியன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது (பொ)) ஜெயசித்ரா, வாக்காளர் பதிவு அலுவலர்கள் வேலூர் சட்டமன்ற தொகுதி/ மாநகராட்சி ஆணையாளர் லெட்சுமணன், அணைக்கட்டு சட்டமன்ற தொகுதி/ வேலூர் வருவாய் கோட்டாட்சியருமான செந்தில்குமார், குடியாத்தம் சட்டமன்ற தொகுதி / குடியாத்தம் வருவாய் கோட்டாட்சியருமான செல்வி சுபலட்சுமி, காட்பாடி சட்டமன்ற தொகுதி/தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) மாறன், கீ.வ.குப்பம் சட்டமன்ற தொகுதி /மாவட்ட வழங்கல் அலுவலர் சரவணன் மற்றும் அரசு துறை சார்ந்த அலுவலர்கள் பணியாளர்கள், அரசால் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரமுகர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## சிவகங்கை அருகே முன்விரோதம் காரணமாக முதியவர் வெட்டி படுகொலை 2 பேர் கைது

சிவகங்கை, நவ.22-

சிவகங்கை மாவட்டம் மறவமங்கலம் அருகே உள்ள கிழவனூர் பகுதியைச் சேர்ந்த சற்குணம் (எ) சரவணன் (57) இவர் அப்பகுதியில் மளிகை கடை நடத்தி வந்தவர்.



சில மாதங்களுக்கு முன்பு, சற்குணத்தின் அண்ணன் கருப்பையாவின் வீட்டருகே உள்ள அவருடைய இடத்தில் வைக்கப்பட்டிருந்த வைக்கோல் படப்பின் மீது ஹரிதாஸின் மாடு மேய்ந்ததாக கூறப்படுகிறது. இதனைத் தொடர்ந்து கருப்பையா மற்றும் ஹரிதாஸ் இடையே தகராறு ஏற்பட்டதில், கருப்பையா ஹரிதாஸை அறிவாளால் தாக்கியதாகவும், இதனால் இருபுறத்தினருக்கும் இடையே முன்விரோதம் நீடித்து வந்ததாகவும் கூறப்படுகிறது. இந்நிலையில், நேற்று முன்தினம் இரவு சற்குணம் மறவமங்கலம் பகுதியில் தனது கடைக்கு தேவையான பொருட்களை வாங்கிக் கொண்டு இருசக்கர வாகனத்தில் ஊரை நோக்கி வந்து கொண்டிருந்தபோது சந்தக் கடை அருகே அங்கு வந்த சில நபர்கள் அவரை தடுத்து நிறுத்தி கண்ணிமைக்கும் நேரத்தில் அறிவாளால் தாக்கியுள்ளனர் கடுமையாக காயமடைந்த அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

இத்தகவல் அறிந்த காளையார் கோவில் காவல்துறையினர் சம்பவ இடத்துக்கு சென்று, சற்குணத்தின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

இந்தக் கொலை வழக்கு தொடர்பாக ஹரிதாஸ், மாதவன் உள்ளிட்ட 2 பேரை காவல்துறையினர் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். சிவகங்கை மாவட்டத்தில் தற்போது கொலை கொள்ளை சம்பவங்கள் அதிகரித்து வருவதால் பொதுமக்கள் அச்சத்தில் உள்ளனர்.



## மேட்டுப்பாளையம் நகர மேல்நிலைப்பள்ளி பிளஸ் டூ மாணவியர்களுக்கு மாதிரி வினாத்தாள்புத்தகங்கள் வழங்கிய எம்.பி., இராசா

கோவை, நவ.22-

கோவை மாவட்டம் மேட்டுப்பாளையம் பகுதியில் தமிழ்நாடு முதலமைச்சர் கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 48வது பிறந்த நாளை முன்னிட்டு மேட்டுப்பாளையம் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் பன்னிரண்டாம் வகுப்பு பயிலும் அனைத்து மாணவிகளுக்கும் மாதிரி வினாத்தாள் புத்தகங்கள் வழங்கும் நிகழ்வு திமுக தலைமை செயற்குழு உறுப்பினர் டி.ஆர்.சண்முகசுந்தரம் ஏற்பாட்டில் நடைபெற்றது. இதில் சிறப்பு அழைப்பாளராக திமுக கழகத் துணைப் பொதுச் செயலாளரும் நீலகிரி பாராளுமன்ற உறுப்பினருமான ஆ. இராசா கலந்து கொண்டு மாதிரி வினாத்தாள் புத்தகங்கள் வழங்கி சிறப்பித்தார். நிகழ்விற்கு கோவை வடக்கு மாவட்ட கழக செயலாளர் தொ. அ. ரவி முன்னிலை வகித்தார். இந்நிகழ்வில் ஆசிரியர் பெருமக்கள், கழக நிர்வாகிகள் உள்ளிட்ட ஏராளமான கலந்து கொண்டனர்.



■ செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் சட்டமன்ற தொகுதி புனித தோமையார் மலை வடக்கு ஒன்றியத்திற்க்குட்பட்ட, பாக நிலை முகவர்கள் (ஙிலிகி2) பாக மின்னனு முகவர்கள் (ஙிஞிகி) பாக இளைஞர் அணி நிர்வாகிகள் ஆலோசனை கூட்டத்தில் தாம்பரம் மாநகர செயலாளர், தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா மற்றும் தாம்பரம் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் பரிதி.இளம்சுருதி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள். இந்நிகழ்வில் புனித தோமையார் மலை வடக்கு ஒன்றிய செயலாளர் ஜிகே.ரவி, அகரம்தென் ஊராட்சி மன்ற தலைவர் சி.கே.ஜெகதீஸ்வரன், திருவஞ்சேரி ஊராட்சி மன்ற தலைவர் ஜனனி சுரேஷ் பாபு, டி.புருஷோத்தம்மன், ஒன்றிய கழக நிர்வாகிகள், கிளை கழக செயலாளர்கள், ஒன்றிய கவுன்சிலர், ஊராட்சி மன்ற உறுப்பினர்கள், ஙிலிகி2, ஙிஞிகி, ஙிலிசி, பாக இளைஞர் அணியினர் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்

## குடியாத்தம் தாலுகா, பரதராமி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி வளாகத்தில் சமீபத்திய மழை காரணமாக குளம் போல் தேங்கி நிற்கும் மழைநீர்

### பள்ளிக்கு செல்ல முடியாமல் தவிக்கும் பள்ளி குழந்தைகள் சாக்கடை கழிவுநீர், துர்நாற்றம் மற்றும் விஷப்பூச்சிகள் இந்த பள்ளியை சுற்றிவளைத்துள்ளதால் பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது

வேலூர், நவ.22-

வேலூர் மாவட்டம், குடியாத்தம் தாலுகா, பரதராமி ஊராட்சி, பரதராமி கிராம பகுதியில் உள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி வளாகத்தில் கடந்த 50 நாட்களாக சாக்கடை கழிவுநீரும் மழைநீரும் குளம் போல் தேங்கியுள்ளது. இதனால் பகுதியில் கடும் துர்நாற்றம் வீசுவதோடு, விஷப்பூச்சிகளின் பரவலும் அதிகரித்து வருகிறது. இந்தப் பள்ளியில் 200க்கும் மேற்பட்ட மாணவர்கள் படித்து வருகின்றனர். தற்போதைய நிலை காரணமாக அவர்கள் கடும் சிரமத்தையும் துயரத்தையும் எதிர்கொண்டு வருகின்றனர்.



இந்தப் பள்ளியில் படிக்கும் 200க்கும் மேற்பட்ட மாணவர்கள் அருகிலுள்ள மற்றொரு பள்ளிக்கு மாற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இதுகுறித்து முன்னாள் ஊராட்சி மன்ற துணைத் தலைவர் நாகராஜ் தெரிவித்ததாவது: பள்ளியின் பக்கத்தில் பெரிய கால்வாய் இருந்தது. ஆனால் தற்போது அந்தப் பகுதியை தனியார் நபர் ஆக்கிரமித்து பட்டா பெற்றிருக்கிறார். இதன் விளைவாக மழைநீர் வெளியேற கால்வாய் இல்லாததால், பள்ளி வளாகத்தில் குளம் போன்ற நிலை உருவாகி, துர்நாற்றமும் விஷப்பூச்சிகளும் அதிகரித்து வருகின்றன என்றார்.

மழைநீரை வெளியேற்றாமல் இருந்தால் பள்ளியை முறையாக நடத்த முடியாது என்றும் அவர் கூறினார். இந்தநிலையை மாவட்ட ஆட்சியரும் பார்வையிட்டு, சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு விரைவான நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தியிருந்தார். ஆனால் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என மக்கள் கூறுகின்றனர்.

இத்தகைய துர்நாற்றம் மற்றும் அசுத்தநிலையிலிருந்து பள்ளி குழந்தைகள் எப்படி பள்ளிக்கு செல்வார்கள் என்று மக்கள் மற்றும் பெற்றோர்கள் கேள்வி எழுப்புகின்றனர். பள்ளிக்கு செல்ல முடியாமல் குழந்தைகள் தவித்து வருகின்றனர். மழைநீர், சாக்கடை கழிவுநீர், துர்நாற்றம், விஷப் பாம்புகள், விஷப்பூச்சிகள் அதிகரித்து பள்ளியை நெருங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதால் பகுதியில் பெரிய அச்சம் நிலவுகிறது.

இந்த துயரமான நிலைமைக்கு மாவட்ட ஆட்சியர் சுப்புலட்சுமி உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள், சமூக ஆர்வலர்கள் மற்றும் மாணவர்களின் பெற்றோர்கள் பலரும் கோரிக்கை விடுத்துள்ளனர்.



## கிருஷ்ணகிரி அருகே சிப்காட்டில் இயங்கி வரும் ஷூ கம்பெனிக்கு ஆள் சேர்ப்பு முகாம்

### நூற்றுக்கணக்கானோர் குவிந்ததால் பரபரப்பு

கிருஷ்ணகிரி, நவ.22-

கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி சிப்காட்டில் இயங்கி வரும் ஷூ கம்பெனிக்கு நடந்த ஆள் சேர்ப்பு முகாமில் நூற்றுக்கணக்கானோர் குவிந்துள்ளன. கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி சிப்காட்டில் இயங்கி வரும் காலனி தயாரிக்கும் நிறுவனத்தில் 52 ஆண்கள், பெண்கள் ஆள் சேர்ப்பு பணி நடைபெற்ற நிலையில், இது குறித்து தகவல் அறிந்த ஏராளமான ஆண்கள் மற்றும் பெண்கள் பயோ டேட்டா உடன் கம்பெனி முன்பு உள்ள பகுதியில் குவிந்ததால் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

கம்பெனியில் இருந்து 8 கிலோமீட்டர் சுற்றியுள்ள நபர்களுக்கு மட்டும் வேலை வாய்ப்பு வழங்க முன்னுரிமை அளிக்கப்பட்டுவரும் நிலையில், 10ஆம் வகுப்பு மட்டுமே தகுதி இருத்தல் போதும் என அறிவித்த நிலையில் பட்டதாரி இளைஞர்களும் குவிந்தனர். வெளியூர் மற்றும் வெளி மாவட்டங்களில் இருந்து ஏராளமான ஆண்கள், பெண்கள் என கையில் பயோ டேட்டா உடன் கம்பெனி முன்பு இளைஞர்கள் வர துவங்கிய சம்பவம் பெரும் பரபரப்பை இப்பகுதியில் ஏற்படுத்தியுள்ளது.




## பொழிச்சலூரில் குழந்தைகள் தினத்தை முன்னிட்டு 200 மாணவர்கள் யோகா, சிலம்பம், கராத்தே செய்து உலகசாதனை படைத்துள்ளனர்

பல்லாவரம், நவ.22-

செங்கல்பட்டு மாவட்டம் பல்லாவரம் அடுத்த பொழிச்சலூரில் உள்ள மரியநிவாஸ் மெட்ரிக் மேல்நிலை பள்ளியில் உலக குழந்தைகள் தினத்தை முன்னிட்டு குழந்தைகளுக்கு எதிரான போதை மருந்து விழிப்புணர்வு குறித்து மாணவர்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் யோகா, சிலம்பம், காரத்தே உலகசாதனை நிகழ்ச்சி நடைப்பெற்றது.


அதன்படி 200க்கும் மேற்பட்ட மாணவர்கள் பல குழுக்களாக யோகா, சிலம்பம், கராத்தே செய்து அசத்தினர்.

14 நிமிடம் 11நொடி இடைவிடாமல் யோகா, சிலம்பம், காரத்தே ஒவ்வொன்றையும் மாணவர்கள் செய்து காட்டியது பார்வையாளர்களை வெகுவாக கவர்ந்தது.

14நிமிடம் 11 நொடி தொடர்ந்து கண்மூடி யோகா, சிலம்பம், காரத்தே செய்த மாணவர்கள் நோவா புக் ஆப் வெல்ட்டு ரிக்கார்ஸில் இடம் பிடித்தனர். பின்னர் சாதனை படைத்த மாணவர்களுக்கு நோவா புக் ஆப் ரெக்கார்ஸின் தலைமை நிர்வாக ஆசிரியர் ராஜ்குமார், சான்றிதழ்கள் மற்றும் பதக்கங்களை வழங்கி கவுரவித்தனர்.

இதற்கான ஏற்பாடுகளை மரியநிவாஸ் மெட்ரிக் பள்ளியின் சேர்மன் ஜெ.ரங்கநாதன், தாளாளர் ஆர்.பத்மினி, துணை சேர்மன் கே.ஆர். ராகவேந்திரன், முதல்வர் விஜயகுமாரி, துணை முதல்வர் தனசேகரன், காரத்தே, சிலம்பம், யோகா மாஸ்டர் வித்யலட்சுமி, யோகா மாஸ்டர் சசிகலா, கராத்தே மாஸ்டர்கள்,பள்ளி ஆசிரியர்கள் ஆகியோர் செய்திருந்தனர்.



## தாராபுரம் பச்சாபாளையத்தில் ‘டைமண்ட் கிரஷர்’ விரிவாக்கத்திற்கு எதிர்ப்பு - 300க்கும் மேற்பட்டோர் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு

திருப்பூர், நவ.22-

திருப்பூர் மாவட்டம் தாராபுரம் அருகே உள்ள பச்சாபாளையம் கிராமத்தில் செயல்பட்டு வரும் டைமண்ட் கிரஷர் நிறுவனத்தை மேலும் விரிவாக்கி புதிய கிளை கல்குவாரி அமைக்கும் முயற்சி நடைபெறுகிறது. இந்த திட்டம் கிராம மக்களின் வாழ்வாதாரம், நீர் வளம் மற்றும் சுற்றுச்சூழலை பாதிக்கும் என பொதுமக்கள் கவலை தெரிவித்துள்ளனர். இதைத் தடுத்து நிறுத்த கோரி சுமார் 300க்கும் மேற்பட்டோர் தாராபுரம் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு அளித்தனர்.

“வீடுகளில் விரிசல்ஞ் உடல்நலப் பிரச்சினைகள்” - பொதுமக்கள் குற்றச்சாட்டு ஏற்கனவே இயங்கி வரும் கிரஷர் நடவடிக்கைகளால் ஏற்படும் அதிர்வு, வெடிப்பு, தூசி, புகை ஆகியவற்றால் வீடுகளில் விரிசல்கள் உருவாகியுள்ளன. மேலும், பலர் உடல்நலக் குறைபாடுகளால் மருத்துவமனைகளுக்கு சென்று வர வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதென பொதுமக்கள் தெரிவித்தனர்.

அப்பகுதியில் இரண்டு முக்கியமான குளங்கள் உள்ளன. மழைக்காலங்களில் இவை நிரம்புவதாலேயே குடிநீர் ஆதாரம் பாதுகாப்பாக உள்ளது. புதிய கல்குவாரி திட்டம் செயல்பட்டால் இந்த நீர்நிலைகள் ஆபத்தில் சிக்கும் என பொதுமக்கள் கவலை தெரிவித்தனர்.

“வனவிலங்குகள் வாழும் பகுதி பாதிக்கப்படும்”

பச்சாபாளையம் அருகே பாதுகாக்கப்பட்ட வனப்பகுதி ஒன்று இருப்பதையும், அங்கு பல்வேறு வனவிலங்குகள் வாழ்வதையும் மனுதாரர்கள் குறிப்பிட்டனர். கல் வெட்டும் பணிகள் அந்த உயிரியல் சூழல் முழுவதையும் பாதிக்கும் அபாயம் இருப்பதாக அவர்கள் தெரிவித்தனர்.

மேலும் தற்போதைய கிரஷர் செயல்பாடுகளை மீண்டும் பரிசீலித்து, அதன் விதிமீறல்களை வெளிப்படையாக மக்களிடம் விளக்குதல்

அருகிலுள்ள தார் பிளாண்டை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்

சுற்றுச்சூழல் மற்றும் பொதுமக்கள் நலனை பொருட்படுத்தி சிறப்பு ஆய்வு மற்றும் ஆலோசனை குழுவை அமைத்தல் வேண்டும்.

அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால்

“எங்கள் வீடுகள், நீர் வளம், விவசாயம், கால்நடைஷை எல்லாம் ஆபத்தில் உள்ளன. இந்த திட்டம் நடைமுறைக்கு வந்தால் ஊரை விட்டு வெளியேற வேண்டிய நிலை வரும்” என மனுதாரர்கள் தெரிவித்தனர். அவர்களின் கோரிக்கைகளுக்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால், தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தை தொடங்க வேண்டிய நிலை உருவாகும் என்று அவர்கள் கோட்டாட்சியர் ஃபிலிக்ஸ் ராஜாவிடம் எச்சரித்துள்ளனர்.



# கோவை தொண்டாமுத்தூர் பகுதியில் அணைக்கட்டுகளை தூர்வாரி புனரமைக்கும்திட்டம் துவக்கி வைப்பு

கோவை, நவ.21-

கோவை மாவட்டம் தொண்டாமுத்தூர் பகுதியில் உள்ள நொய்யல் ஆற்றின் முக்கிய அணைக்கட்டுகளான "புதுக்காடு மற்றும் கிழ்ச்சித்திரைச்சாவடி (குனியமுத்தூர்) அணைக்கட்டுகளை தூர்வாரி புனரமைக்கும் திட்டத்தை சிறுதுளி அமைப்பு கோவை மாவட்ட நிர்வாகம், நீர்வளத்துறை மற்றும் கரூர் வைஸ்யா வங்கியுடன் இணைந்து துவக்க நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் முதன்மை விருந்தினராக கோவை மாவட்ட ஆட்சியர் பவன்குமார் க. கிரியப்பனவர் , கலந்து கொண்டு திட்டத்தை துவங்கி வைத்தார். சிறப்பு விருந்தினர்களாக கரூர் வைஸ்யா வங்கியின் சி.எஸ். ஆர் தலைமை அலுவலர் நதியா மாலி, சிறுதுளியின் நிர்வாக அறங்காவலர் வனிதா மோகன் மற்றும் நீர்வளத்துறையின் உதவிப்பொறியாளர் நல்லதம்பி மற்றும் தமிழ் நாடு விவசாய சங்க தலைவர்கள் சு. பழனிச்சாமி மற்றும் ஆறுச்சாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர் .

இந்நிகழ்வில் சிறுதுளியின் உயர்மட்ட குழு உறுப்பினர்கள் மற்றும் பணியாளர்கள் ஊர் பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# தமிழ்நாடு நில அளவை அலுவலர்கள் ஒன்றிப்பு கண்டன ஆர்ப்பாட்டம்



கோவை, நவ.22-

கோவை மாவட்டம் கோவை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் தமிழ்நாடு நில அளவை அலுவலர்கள் ஒன்றிப்பு கோவை மாவட்ட மையம் சார்பில் 18 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி காலவரையற்ற வேலை நிறுத்த போராட்டத்தை துவக்கியது.

போராட்டத்தில் தமிழ்நாடு நில அளவை அலுவலர்கள் ஒன்றிப்பு மதுரையில் நவம்பர் 1ம் தேதி நடைபெற்ற வேலை நிறுத்த ஆயத்த மாநாட்டின் அரை கூவல் தீர்மானத்தின் படி 18 அம்ச கோரிக்கைகளை நிறைவேற்ற வலியுறுத்தி 18.11.2025 அன்று முதல் கால வரையற்ற வேலை நிறுத்த போராட்டத்தின் ஒரு பகுதியாக எங்களது நியாயமான கோரிக்கைகளை தமிழ்நாடு அரசு பரிசீலித்து உடனடியாக மாநில நிர்வாகிகளை அழைத்து பேசி கோரிக்கைகளை நிறைவேற்றி தர வேண்டுமென வலியுறுத்தி மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் செய்தனர். ஆர்ப்பாட்டத்தில் களப்பணியாளர்களின் பணிச்சுமையை போக்கிட, பணிகளை முறைப்படுத்திட, தரம் இறக்கப்பட்ட குறுவட்ட அளவர் பதவிகளை மீள பெற்றிட, புறஆதாரம் மற்றும் ஒப்பந்த முறை பணி நியமனத்தை முற்றிலும் கைவிட, நில அளவர் பணியிடங்களை நிரப்பி ட, ஊதிய முரண்பாடுகளை களைந்திட, வட்டம், குறுவட்டம், நகர சார் ஆய்வாளர், ஆய்வாளர், உள்ளிட்ட புதிய பணியிடங்களை நிரப்பிட வேண்டி மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் செய்தனர். மேலும் இம் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டமானது மாவட்டத் தலைவர் ஜா.நிமலன் கிறிஸ்டோபர் தலைமையில், இணை செயலாளர் இரா. சுரேந்திரன் வரவேற்புரையில், மாவட்ட துணைத் தலைவர் தெ.அசோகன் முன்னிலையில், மாவட்டச் செயலாளர் ச. தமிழ்ச்செல்வன் கோரிக்கை விளக்க உரையாற்ற, மாவட்டச் செயலாளர் கமலஹாசன், மாவட்ட ஒருங்கிணைப்பாளர் சையத் உசேன், வங்கி ஊழியர் சம்மேளனம் இரா.மகேஸ்வரன், அடிப்படை ஊழியர் சங்க பொதுச்செயலாளர் இரா. ரவி உள்ளிட்டோர் தோழமை உரையாற்றினார்கள்.

அதன் பின்னர் மாவட்ட செயலாளர் பா. செந்தில் குமார் சிறப்புரையும். நிறைவு உரையை மாநில செயலாளர் த. சதீஷ்குமாரும், மாவட்ட பொருளாளர் செ. வேல்முருகன் நன்றியுரை நல்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.



# ஸ்டடி வேர்ல்ட் பொறியியல் கல்லூரியில் 'யுவ ஆடுகளம்' விளையாட்டு விழா தொடக்கம்

கோவை, நவ.22-

கோவை மாவட்டம் மதுக்கரை பாலத்துறை பகுதியில் உள்ள ஸ்டடி வேர்ல்ட் பொறியியல் கல்லூரியில் மாணவர்களுக்கான''யுவ ஆடுகளம்' விளையாட்டு விழா 2025 கல்லூரியின் தலைவர் டாக்டர் வித்யா வினோத் அறிவுறுத்தலின் படி நடைபெற்றது.

இவ்விளையாட்டு விழாவில் நிர்வாக அலுவலர் எம்.எம் மனோகரன், தலைமை செயல் அதிகாரி டாக்டர் பி. கோமதி, கல்லூரி முதல்வர் டாக்டர் கே.கீதா ஆகியோர் முன்னிலை வகித்தனர். மண்டல அளவில் நடைபெற்ற போட்டிகளில் கோவை மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் இருந்து 47 பள்ளிகளிலிருந்து 500 கும் மேற்பட்ட மாணவ மாணவியர்கள் பல்வேறு விளையாட்டு மற்றும் இலக்கியப் போட்டிகளில் பங்கேற்றனர்.

மாணவருக்கு கிரிக்கெட், கால்பந்து, கபடி, கூடைப்பந்து, நடைபெற்றன. மாணவியருக்கு , த்ரோபால் கொக்கோ, பேட்மிட்டன் உள்ளிட்ட பல்வேறுவகையான விளையாட்டு போட்டிகள் நடைபெற்றன.

மேலும் கட்டுரைப் போட்டி,பேச்சுப் போட்டி, ஓவியப் போட்டி, பட்டிமன்றம் போன்ற இலக்கிய நிகழ்வுகள் நடைபெற்றது. இதில் ஏராளமான மாணவ,மாணவியர்கள் பெரும் உற்சாகத்துடன் கலந்து கொண்டு தங்களது திறமைகளை வெளிப்படுத்தினர்..

இது குறித்து நிர்வாகம் சார்பாக தெரிவிக்கையில் இந்த யுவ ஆடுகளம் போட்டிகளில் கலந்து கொள்ளும் மாணவ மாணவியர்களுக்கு எந்த ஒரு பதிவு கட்டணமும் உணவு கட்டணமும் வாங்கப்படவில்லை மேலும் மாணவ மாணவர்களின் தங்கும் இட வசதிகளும் இலவசமாகவே நமது கல்லூரியின் சார்பாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது... விளையாடி போட்டிகளில் பங்கேற்ற அனைத்து மாணவ மாணவர்களும் தங்களது திறமைகளை வெளிப்படுத்தி வெற்றி பெற வேண்டும் என்று அனைவரும் வாழ்த்துகிறோம். என்று தெரிவித்தனர்.

இதில் பங்கேற்ற பள்ளி ஆசிரியர்கள் கல்லூரி வழங்கிய வரவேற்பு, ஒழுங்கமைப்பு மற்றும் வசதிகளை பாராட்டினர்.

உற்சாகம் நிரம்பிய முறையில் முதல் நாள் நிகழ்வுகள் வெற்றிகரமாக நிறைவடைந்தன. இரண்டாம் நாளில் (22.11,2025) இறுதி சுற்றுப் போட்டிகளில் வெற்றி பெறும் அணிகளுக்கு பரிசளிப்பு விழா நிகழ்வுகளும் நடைபெற உள்ளன.

இந்நிகழ்ச்சியில் கல்லூரி ஆசிரியர்கள் மாணவர்கள் உட்பட ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.



# இப்படியும் ஒரு விழிப்புணர்வு மரங்களில் ஆணியை அகற்றி மஞ்சள் பத்து போடும் எஸ்ஐ

ராமநாதபுரம், நவ.22-

மரங்களில் விளம்பர பலகைகளை மாட்டி வைப்பதற்காக அறையப்பட்ட ஆணிகளை அகற்றி சிறப்பு எஸ்ஐ விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறார். ராமநாதபுரம் பொருளாதார குற்றப்பிரிவு சிறப்பு எஸ்ஐ சுபாஷ் சீனிவாசன்.

இயற்கை ஆர்வலரான இவர், ராமநாதபுரம் மாவட்டம் முழுவதும் மரங்களில் மாட்டப்பட்டுள்ள விளம்பர பலகைகள், ஆணிகளை ஓய்வு நேரங்களில் அகற்றி வருகிறார். மேலும் ஆணி பிடுங்கிய இடத்தில் மஞ்சள் வைத்து மூடி முதலுதவியும் செய்து வருகிறார்.

இதுகுறித்து சிறப்பு எஸ்ஐ சுபாஷ் சீனிவாசன் கூறும்போது, ''ராமநாதபுரம் மாவட்டத்தில் பசுமை தமிழ்நாடு இயக்கத்தின் கீழ் ஒரு கோடி மரக்கன்றுகள் நடும் திட்டத்தை கடந்த 2023ல் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் துவக்கி வைத்தார்.

அதன்படி மாவட்ட நிர்வாகம் சார்பில் மரத்தின் அவசியம் குறித்து பல்வேறு வழிகளில் விழிப்புணர்வுகளை ஏற்படுத்தி வருகின்றனர். மரங்களால் மழை பெய்யும் அளவு அதிகரிக்கும். குடிநீர் தட்டுப்பாடு குறையும். விவசாயம் செழிக்கும், புவி வெப்பமயமாக்கல் தடுக்கப்படும்.

இவ்வளவு நன்மை செய்யும் மரத்தில் விளம்பர பலகையை மாட்டி வைப்பதற்காக ஆணி அடித்து சேதப்படுத்தி வருவது வேதனையாக உள்ளது. இது சட்டத்திற்கு புறம்பான செயல் ஆகும்.

எனவே மரத்தில் ஆணி அடிப்பது போன்ற செயல்களில் ஈடுபடுவதை உரிய நிறுவனங்கள் தவிர்க்க வேண்டும். அனைத்து தரப்பினரும் மரம் நடுவது மட்டுமின்றி, இருக்கின்ற மரத்தை பாதுகாக்க வேண்டும் என விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறேன்'' என்றார்.



# மதுரை ஆனையூர் கிராம மயானத்திற்கான இடம் ஒதுக்கியதில் சிக்கல் மாவட்ட ஆட்சியரிடம் மனு

மதுரை, நவ.22-

மதுரை ஆனையூர் கிராம சபை நிர்வாகத்தின் சார்பில் தலைவர் கண்ணன்,செயலாளர் கண்ணன், பொருளாளர் முத்துசாமி ஆகியோர் மாவட்ட ஆட்சியரிடம் மனு அளித்தனர். மனுவில் கூறியதாவது மாநகராட்சி வார்டு 3 மண்டலம் 1ல் உள்ள ஆனையூரில் பலநூறு வருடங்களுக்கு முன்பு இருந்து ஆனையூர் கிராம மயானம் இருந்து வருகிறது இப்பகுதி மக்கள் சுமார் 5000 குடும்பங்கள் பயன்படுத்தி வருகின்றனர். இந்த மயானத்தில் இந்து மக்களில் பல்வேறு சமூகத்தினர் அவரவர் குலவழக்கப்படி எரியூட்டியும் புதைத்து வருகின்றனர். தற்போது முஸ்லீம் சமூகத்தை சேர்ந்தவர்கள் தங்களின் மத கோட்பாட்டின் அடிப்படையில் அடக்கம் செய்ய மயானம் வேண்டி தமிழக அரசுக்கும் மதுரை மாநகராட்சிக்கும் மயானம் கேட்டு கோரிக்கை வைத்ததன் அடிப்படையில் ஏற்கனேவே ஆனையூர் கிராம சுடுகாட்டில் முஸ்லீம் மதத்தினர் அடக்கம் செய்ய இடம் ஒதுக்கி செய்யப்பட்டுள்ளதாக மதுரை மாநகராட்சி அதிகாரிகள் கூறுகின்றனர். அதே சுடுகாட்டை சுற்றி மதுரை மாநகராட்சிக்கு சொந்தமான மற்றும் அரசுக்கு சொந்தமான ஆட்சேபனை இல்லாத காலி இடங்கள் பல உள்ளன வேண்டுமென்றே சகோத்துவமாக வாழும் இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் ஏற்கனவே பலமுறை ஆட்சேபனை உள்ள ஆனையூர் கிராம சுடுகாட்டில் வேண்டுமென்றே முஸ்லிம்களின் சுடுகாட்டிற்க்கு இடத்தை மதுரை மாநகராட்சியும் மாவட்ட ஆட்சியாளரும் வழங்கி உள்ளன இதனால் அந்த பகுதி மக்கள் மிகவும் வேதனையுடன் உள்ளனர்எனவே மத மோதலை தூண்டி விட்டு தமிழக அரசுக்கு கேட்ட பெயர் ஏற்படுத்த முயலும் மதுரை மாநகராட்சி அதிகாரிகளின் நடவடிக்கைகளை தடுத்து நிறுத்தி ஆட்சேபனை இல்லாத மதுரை மாநகராட்சி இடத்திலாவது அல்லது அரசு இடத்திலாவது முஸ்லீம் சுடுகாட்டிற்க்கு இடம் வழங்கி மத மோதலை தூண்ட நினைக்கும் அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை வைத்தனர். இந்நிகழ்வில் இந்து முன்னணி மாவட்டத் தலைவர் அழகர்சாமி இந்திய கம்யூனிஸ்ட் மாவட்ட துணைச் செயலாளர் வீரணசிங்கம் , மயான கமிட்டி உறுப்பினர் கள்கிராம பொதுமக்கள் ஏராளமான கலந்து கொண்டனர்.

# கோவை மாவட்டம் கூட்டுறவுத்துறை சார்பில் 72 வது அனைத்து இந்திய கூட்டுறவு வார விழா



கோவை, நவ.22-

கோவை மாவட்ட அளவிலான 72வது அனைத்து இந்திய கூட்டுறவு வார விழா "உலகளாவிய போட்டித் தன்மைக்கான புதுமையான கூட்டுறவு வணிக மாதிரிகள்" என்ற தலைப்பில் கோவை தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் கலைஞர் பட்டமளிப்பு விழா அரங்கத்தில் இன்று மாலை நடைபெற்றது. இவ்விழாவிற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் பவன்குமார் க. கிரியப்பனவர் தலைமையேற்று விழா கொடியினை ஏற்றி நிகழ்ச்சியை துவக்கி வைத்தார். தொடர்ந்து கோயம்புத்தூர் கூட்டுறவு சங்கத்தின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள கூட்டுறவு தயாரிப்பில் உருவாக்கப்பட்டுள்ள அரங்கத்தினை பார்வையிட்டார்.

நிகழ்ச்சிக்கு கோயம்புத்தூர் மண்டலம் கூட்டுறவு சங்கங்களின் இணை பதிவாளர் அழகிரி வரவேற்புரை வழங்கினார். கோயம்புத்தூர் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி கூடுதல் பதிவாளர் மற்றும் மேலாண்மை இயக்குனர் ராமகிருஷ்ணன் திட்ட விளக்க உரையாற்றினார். கோயம்புத்தூர் நாடாளுமன்ற உறுப்பினர் கணபதி ப.ராஜ்குமார் விழா பேருரை ஆற்றினார். நிகழ்ச்சிக்கு மாநகராட்சி மேயர் ரங்கநாயகி ராமச்சந்திரன், தமிழ்நாடு தூய்மை பணியாளர்கள் நல வாரியத் தலைவர் திப்பம்பட்டி ஆறுச்சாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில் மண்டல குழு தலைவர் தெய்வயானை தமிழ்மறை, இணைப்பதிவாளர் சிவக்குமார், மாவட்ட வருவாய் அலுவலர் பழனி குமார், இணைப்பதிவாளர் கோமதி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் பவன்குமார் க. கிரியப்பனவர் பேசுகையில், கோவையில் உள்ள 860 கூட்டுறவு சங்கங்களுக்கு வாழ்த்துக்களை தெரிவித்ததோடு தமிழக அரசின் அனைத்து திட்டங்களும் கூட்டுறவு சங்க மூலம் சிறப்பாக செயல்படுத்தப்படுகிறது. இதனை மக்களுக்கு சிறப்பான முறையில் நீங்கள் கொண்டு செல்ல வேண்டும். மேலும் கூட்டுறவு மூலம் புதிய தயாரிப்பு உற்பத்தியை மக்கள் மத்தியில் கொண்டு சேர்க்க வேண்டும். கோவை மாவட்டத்தில் செழுமை, பகலவன், யாழ்இசை போன்ற புதிய பிராண்டட் பொருட்கள் நல்ல வரவேற்பை பெற்றுள்ளது மகிழ்ச்சி அளிக்கிறது என தெரிவித்தார்.

தொடர்ந்து மாவட்ட அளவில் நடைபெற்ற கூட்டுறவு வார விழாவில் பள்ளி மாணவர்களுக்கு நடைபெற்ற பேச்சுப்போட்டி, கட்டுரை போட்டி, ஓவிய போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. தொடர்ந்து சிறந்த கூட்டுறவு பணியாளர்களுக்கு விருதுகளும், வீடு அடமான கடன், வீட்டு வசதி கடன், மகளிர் சுய உதவிக் கடன், கல்வி கடன் போன்றவை பயனாளர்களுக்கு வழங்கப்பட்டது. தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளுடன் விழா இனிதே நிறைவு பெற்றது.



# அஸ்தினாபுரம் ஷிக்ஷா பப்ளிக் பள்ளி சார்பில் சுற்றுசூழலை பாதுகாக்க வலியுறுத்தி பசுமை தின விழிப்புணர்வு பேரணி வெகு சிறப்பாக நடைப்பெற்றது

குரோம்பேட்டை, நவ.22-

செங்கல்பட்டு மாவட்டம் குரோம்பேட்டை அடுத்த அஸ்தினாபுரத்தில் உள்ள ஷிக்ஷா பப்ளிக் பள்ளியில் உலக பசுமை தினத்தை முன்னிட்டு பிளாஸ்டிக் பொருட்களை தவிர்த்து சுற்றுசூழலை பாதுகாக்க வலியுறுத்தி மழலை குழந்தைகளின் விழிப்புணர்வு பேரணி நடைப்பெற்றது. பேரணியை பள்ளி தாளாளர் ரஞ்சித் கொடியசைத்து தொடங்கி வைத்தார். இதில் எல்.கே.ஜி. யு.கே.ஜி. படிக்கும் பள்ளி மாணவர்கள் சுற்று சூழல் பாதுகாப்பு மற்றும் பசுமையை வலியுறுத்தி பச்சை நிற ஆடைகள் அணிந்தும், இலை, தளைகளை உடுத்தியும் பேரணியில் மழலை குழந்தைகள் கலந்து கொண்டது பார்ப்போரை வெகுவாக கவர்ந்தது.

மேலும் எந்தந்த பிளாஸ்டிக் பொருட்களால் சுற்று சூழல் மாசு ஏற்படும் என்பதை விளக்கும் வகையில் பிளாஸ்டிக் பொருட்களை உடலில் அணிந்து குழந்தைகள் விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

அதனை தொடர்ந்து நெகிழி தவிர்போம், சுற்று சூழலை பாதுகாப்போம் என கோஷங்களை எழுப்பி முக்கிய வீதிகள் வழியாக மாணவர்கள் பேரணியாக சென்று பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

இந்த விழிப்புணர்வு பேரணியில் பசுமையை ஒவ்வொருவரிடமும் வலியுறுத்தும் வகையில் வீடுவீடாக சென்ற குழந்தைகள் பழம் மற்றும் மரச்செடிகளுக்கான விதை பந்துகளை கொடுத்து விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

இதில் நூற்றுகணக்கான குழந்தைகள், ஆசிரியர்கள் என பலரும் கலந்து கொண்டனர். மேலும் குழந்தைகளின் பேரணிக்கு குடியிருப்போர் நலச்சங்க நிர்வாகிகளும் ஆதரவு தெரிவித்து குழந்தைகளை வரவேற்றனர்



# மானாமதுரையில் பெண்கள் முன்னேற்றத்திற்கு இலவச கம்ப்யூட்டர் பயிற்சி முகாம் நடைபெற்றது

மானாமதுரை, நவ.22-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை கண்ணார் தெருவில் உள்ள ஆதரவு அறக்கட்டளையில் பெண்களுக்கு கம்ப்யூட்டர் பயிற்சி, தையல் பயிற்சி பியூட்டிசியன் உள்ளிட்ட பல்வேறு வகுப்புகள் இலவசமாக நடத்தப்பட்டு வருகிறது. இந்த வகுப்புகள் மத்திய அரசின் இலவச திறன் மேம்பாட்டு துறையின் மூலம் இலவசமாக நடத்தப்பட்டு வருகிறது. கடந்த ஓராண்டுக்கு மேலாக இந்த ஆதரவு அறக்கட்டளையில் ஏராளமான பெண்கள் இலவசமாக பயிற்சி பெற்று தனியார் நிறுவனங்களில் வேலைகளில் சேர்ந்துள்ளனர். மற்றும் சொந்தமாக தொழில் நடத்தி வருகின்றனர். இந்நிலையில் கடந்த நான்கு மாதங்களாக கம்ப்யூட்டர் பயிற்சி பெற்று வந்த 20க்கும் மேற்பட்ட பெண்களுக்கு நேற்றுடன் பயிற்சி வகுப்புகள் நிறைவடைந்து. இதனைக் கொண்டாடும் விதமாக இலவசமாக பயிற்சி பெற்று வந்த பெண்கள் கேக் வெட்டி தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். மேலும் பயிற்சி பெற்ற பெண்களுக்கு ஆதரவு அறக்கட்டளை நிறுவனர் செல்வம் சான்றிதழ்களை வழங்கினார்.

கம்ப்யூட்டர் பயிற்சி பெற்ற பெண் கள் கூறுகையில், இந்த கம்ப்யூட்டர் பயிற்சியை தனியார் பயிற்சி வகுப்பில் படித்தால் 10 ஆயிரத்திற்கும் மேல் செலவாகும். இதனால் ஏழ்மையான குடும்ப பெண்கள் படிக்க முடியாத சூழ்நிலை இருந்து வந்தது இதனை ஆதரவு அறக்கட்டளை நிறுவனம் நிறைவேற்றியுள்ளது. மேலும் தற்போதைய நவீன காலகட்டத்தில் கம்ப்யூட்டர் இன்றியமையாத ஒன்றாக உள்ளது. இதனால் பெண்களுக்கு தொழில்துறையில் முன்னேற இந்த பயிற்சி வகுப்பு அறிவாற்றலை மேம்படுத்தி வல்லுனராக மேம்படுத்த உதவுகிறது எனக் கூறினர்.

# சொத்து வாங்கும் நடைமுறைகளை வெளிப்படைத்தன்மையுடன் நவீனமயமாக்க ரூப் அன்ட் ப்ளோர் இணையதளத்துடன் கைகோர்க்கும் கிரெடாய் தமிழ்நாடு

சென்னை, நவ.22-

தமிழக ரியல் எஸ்டேட் துறையில் புதியதொரு மாற்றத்தை ஏற்படுத்த, மாநிலத்தின் மிகவும் நம்பகமான மற்றும் பிரபல கட்டுமான நிறுவனங்களை உள்ளடக்கிய கிரெடாய் தமிழ்நாடு அமைப்பு, வெளிப்படைத்தன்மை, அதிநவீன டிஜிட்டல் தொழில்நுட்பம் மற்றும் நம்பிக்கை சார்ந்த ஈடுபாடு மூலம் ரியல் எஸ்டேட் துறையை நவீனமயமாக்கி வரும் ஐபிஜ மீடியா டெக்னாலஜிஸ் குழுமத்தின் துணை நிறுவனமான ரூப் அன்ட் ப்ளோர் உடன் இணைந்து செயல்பட இருப்பதாக அறிவித்துள்ளது. வீடு வாங்குபவர்களுக்கும் கட்டுமான நிறுவனங்களும் இடையிலான இடைவெளியைக் குறைக்க கிரெடாய் தமிழ்நாடு மற்றும் ரூப் அன்ட் ப்ளோர் ஆகியவை இணைந்து செயல்பட உள்ளன. இதன்மூலம் சொத்து வாங்குவோர் தங்களுக்கு தேவையான இடங்களை எளிமையாக கண்டறியவும், மேலும் அந்த சொத்து தொடர்பான வில்லங்கம் முதல் நம்பகமான, சரியான திட்டத் தகவல்கள் வரை பெற முடியும். இந்த கூட்டாண்மை, தொழில்துறை தரங்களை உயர்த்துவதற்கும், தமிழ்நாட்டின் ரியல் எஸ்டேட் துறையை முழுமையாக வெளிப்படையான, தொழில்நுட்பம் சார்ந்த எதிர்காலத்திற்கு தயார்படுத்துவதை நோக்கமாகக் கொண்டதாகும்.





இது குறித்து கிரெடாய் தமிழ்நாடு தலைவர் ஹபீப் கூறுகையில், ரியல் எஸ்டேட் துறையில் அதிக வெளிப்படைத்தன்மை, தொழில்முறை சார்ந்த உதவிகள் மற்றும் டிஜிட்டல் ஒருங்கிணைப்புக்காக நாங்கள் ரூப் அன்ட் ப்ளோர் உடன் இணைந்துள்ளோம். எங்கள் அமைப்பில் உறுப்பினர்களாக உள்ள கட்டுமான நிறுவனங்களின் வளர்ச்சிக்கு தேவையான டிஜிட்டல் தொழில்நுட்ப உதவிகளை ரூப் அண்ட் ப்ளோர் வழங்கும். மேலும், வரும் 29 மற்றும் 30 ஆகிய தேதிகளில் துபாயில் 'ப்பேர் ப்ரோ 3வது சர்வதேச கண்காட்சி'யையும் நாங்கள் நடத்த இருக்கிறோம் என்று தெரிவித்தார்.

இது குறித்து ஐபிஎம் மீடியா டெக்னாலஜிஸ் நிறுவனத்தின் நிறுவனர் மற்றும் தலைமை செயல் அதிகாரி இளவரசன் கூறுகையில், தொழில்நுட்பம் மற்றும் நம்பிக்கை மூலம் வாடிக்கையாளர்கள் சொத்து வாங்குவதை எளிமைப்படுத்த வேண்டும் என்பதே எங்கள் நோக்கமாகும். அதற்காகவே நாங்கள் கிரெடாய் தமிழ்நாடு உடன் இணைந்துள்ளோம். இது கட்டுமான நிறுவனங்கள் மற்றும் வாங்குபவர்கள் இருவருக்கும் ஒரு சக்திவாய்ந்த டிஜிட்டல் சுற்றுச்சூழல் அமைப்பை உருவாக்க எங்களுக்கு உதவும் என்று தெரிவித்தார்.

உண்மையான தரவுகள், புதிய தொழில்நுட்பம் மற்றும் கிரெடாய் நெட்வொர்க்கின் வலிமை ஆகியவற்றின் அடிப்படையில் எங்கள் தளத்தை நாங்கள் வடிவமைத்து உள்ளோம். ரியல் எஸ்டேட் பரிவர்த்தனைகளை சம்பந்தப்பட்ட அனைவருக்கும் மிகவும் வெளிப்படையானதாக்கவும், எளிமையானதாகவும், திறமையானதாகவும் மாற்றுவோம் என்றும் தெரிவித்தார்.





# வேலூர் மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை சார்பில் பள்ளி மாணவர்களுக்கு புத்தாக்க பயிற்சி

வேலூர், நவ.22-

வேலூர் மாவட்டம், வேலூர் தாலுகா, சத்துவாச்சாரி, மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், மாவட்ட உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை சார்பில் இளம் நுகர்வோர்களுக்கு நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் 2019 குறித்த புத்தாக்கப் பயிற்சி மாவட்ட ஆட்சியர் சுப்புலெட்சுமி தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் மா.சிவசுப்பிரமணியன், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக மண்டல மேலாளர் விஜயலக்ஷிமி, மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர் ச.சரவணன், உணவு பாதுகாப்புத்துறை மாவட்ட நியமன அலுவலர் மருத்துவர். வி.பிரபாகரன், மாவட்ட நுகர்வோர் குறைதீர் குழு உறுப்பினர் வழக்கறிஞர் கே.குமரேஸ்வரன், உணவு பாதுகாப்பு ஆய்வாளர் ராஜேஷ், மாவட்ட வழங்கல் அலுவலரின் நேர்முக உதவியாளர் தி.மீரா பென்காந்தி, அரசு துறை சார்ந்த அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள், பள்ளி மாணவ மாணவியர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



■ திருப்பூர் மாவட்டம், அவிநாசிலிங்கம்பாளையம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி மாணவன் செல்வன் ஆர்.சபரிஆனந்த் ஹைதராபாத்தில் நடைபெற்ற 25வது தேசிய பாரா நீச்சல் போட்டியில் மூன்று தங்கப்பதக்கங்கள் வென்றுள்ளதையொட்டி மாவட்ட ஆட்சியர் டாக்டர். மனிஷ் நாரணவரே கடந்த (நவ20) மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றார். உடன் மாவட்ட விளையாட்டு அலுவலர் ரகுகுமார் உள்ளார்.











# தேசிய நூலக வார விழாவில் சிறப்பு பட்டிமன்றம்

சிவகங்கை, நவ.22-

சிவகங்கையில் உள்ள. கவியோகி சுத்தானந்தபாரதி மாவட்ட மைய நூலகத்தில் நூலக வார நிறைவு விழா நடைபெற்றது.

மாவட்ட மைய நூலகர் வெங்கடவேல் தலைமையில் நடைபெற்றது. நூலகர் முத்துக்குமார் வரவேற்று பேசினார். இருப்பு சரிபார்ப்பு அலுவலர் வெள்ளைச்சாமி கண்ணன் முன்னிலா வகித்தார்.

விழாவில் சிறப்பு விருந்தினராக இளையமன்னர் மகேஷ்துரை கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றினார்.பின்னர் கைபேசி ஆபத்தானதா? ஆனந்தமானதா? எனும் தலைப்பில் பட்டிமன்றம் நடைபெற்றது.

வாசகர் வட்டத்தலைவர் அன்புத்துரை நடுவராக இருந்தார். ஆனந்தமானதே எனும் தலைப்பில் ராமச்சந்திரன், சரன்யா ஆகியொரும், ஆபத்தானதே எனும் தலைப்பில் முத்துக்கண்ணு, மீனாட்சிசுந்தரம்

ஆகியோரும் பேசினார்கள நிறைவில் கைபேசி ஆனந்தமானதே என நடுவர் தீர்ப்பு வழங்கினார்.

விழாவில் எழுத்தாளர் ஈஸ்வரன். வழக்கறிஞர் செந்தில்குமார். நூலகர்கள் செந்தில்.சந்திரா ,சாந்தி சங்கரலிங்கம் உள்ளிட்ட பலரும் கலந்து கிண்டனர்.





# சோழிங்கநல்லூர் கிழக்குப் பகுதி சார்பில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு இளைஞர்களின் எழுகதிர் கருத்தரங்கம்

சோழிங்கநல்லூர், நவ.22-

சென்னை தெற்கு மாவட்டம், சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட நீலாங்கரையில் (நவ: 20 ) இடம் : ராணி மஹால் மாலை 5 மணிக்கு சோழிங்கநல்லூர் கிழக்கு பகுதி கழகச் செயலாளர்.,15 மண்டல குழு தலைவர், நீலாங்கரை., வி. இ .மதியழகன் தலைமை நிகழ்ச்சி ஏற்பாட்டில் சிறப்பாக நடைபெற்றது.

மருத்துவ மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் மா. சுப்ரமணியன், தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர்., தமிழச்சி தங்கபாண்டியன், சோழிங்கநல்லூர் எம்.எல்.ஏ., எஸ். அரவிந்த் ரமேஷ் விழாவை துவக்கி வைத்தனர். வி .எட்டியப்பன், கே .குமார் முன்னிலை வகித்தனர். வரவேற்புரையாக எஸ். ஜானகிராமன், மா. மகேஸ்வரன், ஜி. விஜயகுமார், வி. எஸ் .சுதா, என். பாஸ்கரன், கே. வி .சாத்தப்பன், பி. எஸ். ஆறுமுகம், கி. சத்திய வேலன், எஸ். கர்ணா, ஏ. கே. ஆனந்த், க.ஏகாம்பரம், பி. என் .ஜோதி, டி. சீனிவாசன். தொடர்ந்து கழக இளைஞரணி செயலாளர், துணை முதலமைச்சர், உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு இளைஞர்களின் எழுகதிர் கருத்தரங்கம் பேராசிரியர், சுபா. வீரபாண்டியன், டாக்டர் ,வி. பொன்ராஜ் சிறப்புரையாற்றினார்கள். நன்றி உரையாக ஆர். பற்குணன் உள்ளிட்ட திமுக கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.

# திருப்பூர் மாவட்ட ஆட்சித்தலைவர் மனிஷ் நாரணவரே தலைமையில் மாவட்ட அளவிலான பணிக்குழு மற்றும் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம்

திருப்பூர், நவ.22-

திருப்பூர் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர். மனிஷ் நாரணவரே இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் தமிழ்நாடு மாசு கட்டுபாடு வாரியம் சார்யில் மாவட்ட அளவிலான பணிக்குழு மற்றும் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நடைபெற்றது.

தடைசெய்யப்பட்ட ஒரு முறை பயன்படுத்தி தூக்கி எரியப்படும் நெகிழி கழிவுகள் பயன்பாட்டை தடைசெய்யும் நீதி பேரானை நடைமுறைப்படுத்த சமந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் நிருவாகத்திற்குற்பட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்களுடன் இணைந்து ஆய்வு மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது. மேலும், மாதம் ஒருமுறை ஒவ்வொரு தலைப்பின் கீழ் நடைபெறும் மாபெரும் நெகிழி கழிவு சேகரிப்பு நிகழ்வு மற்றும் சுத்தம் செய்யும் நிகழ்வில் உள்ளாட்சி அமைப்புகள் பங்கு பெற்று சேகரிக்கப்படும் நெகிழி கழிவுகளை இணை எரியூட்டு முறையில் அகற்றப்பட வேண்டும். நெகிழி கழிவு மேலாண்மையை திறம்பட செயல்படுத்துவது குறித்தான கலந்தாய்வு மேற்கொள்ளப்பட்டது.

நெகிழி (பிளாஸ்டிக்) மாசுபாட்டைக் குறைக்க மாவட்ட அளவிலான பணிக்குழுக்கூட்டம் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்ய பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள், ழிசிசி, ழிஷிஷி, சாரணசாரணியர் இயக்கம், இளைஞர் மன்றங்கள், பசுமை மன்றங்கள் மற்றும் தன்னார்வ அமைப்புகளை இணைத்து வலுவான மக்கள் இயக்கத்தை உருவாக்க வேண்டும். சுற்று சூழலுக்கு உகந்த மாற்றுப்பொருட்கள் பயன்பாட்டை ஊக்குவித்து பரப்புரைகள் மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும், இக்கூட்டத்தில் நெகிழி கழிவு அமைப்பில் உள்ள குறைகளை நிவர்த்தி செய்வதற்கான வழிமுறைகள் குறித்து விவாதிக்கப்பட்டது. இந்நிகழ்வை ஒருங்கிணைத்து நடைமுறை படுத்த பசுமை தோழி என்ற பணியிடம் நியமிக்கப்பட்டுள்ளது .

மேலும், மஞ்சப்பை பயன்பாட்டை ஊக்குவிக்கும் நோக்கில் தமிழ்நாடு மாசுகட்டுப்பாடு வாரியத்தால் அமைக்கப்பட்டுள்ள தானியங்கி இயந்திரத்தை பொதுமக்கள் பயன்படுத்த வேண்டும் எனவும் நெகழி இல்லா தமிழகத்தை உருவாக்க பொதுமக்கள் அனைவரும் ஒத்துழைப்பு தருமாறு கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் மனிஷ் நாரணவரே இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்தார்கள்.

இக்கூட்டத்தில், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்கள் (திருப்பூர் வடக்கு) திரு.பாரதிராஜா, (திருப்பூர் தெற்கு) திரு.சத்தியன், பறக்கும் படை செயல் அலுவலர் திருமதி லாவண்யா, பொது மேலாளர் (ஆவின்) திருமதி சுஜாதா, மாவட்ட சுற்றுலா அலுவலர் திரு.அரவிந்த் குமார் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

# திருப்பூர் மாவட்ட ஆட்சித் தலைவர் மனிஷ். மாணவ, மாணவிகளுக்கு, சிறப்பு கல்விக்கடன் முகாம்

திருப்பூர், நவ.22-

நவம்பர் 21 திருப்பூர் மாவட்டத்தைச் சேர்ந்த மாணவ, மாணவிகள் கல்விக் கடனுக்காக விண்ணப்பிக்க 'சிறப்பு கல்விக்கடன் முகாம்;'' நவம்பர் 26, 2025 புதன்கிழமை அன்று மாவட்டத்தின் முன்னோடி வங்கியான கனரா வங்கி மற்றும் திருப்பூர் மாவட்டத்தில் இயங்கி வரும் அனைத்து வங்கிகளின் சார்பில் கல்விக் கடன் வழங்கும் முகாம் காலை 10.00 மணி முதல் நண்பகல் 2.00 மணி வரை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், தரை தளம், அறை எண் 20ல் நடைபெறவுள்ளது.

கல்விக்கடன் பெற விரும்பும் மாணவர்கள் www.pmvidyalaxmi.co.in <http://www.pm-vidyalaxmi.co.in/> என்ற இணையதளத்தில் தங்களுடைய விண்ணப்பத்தை தேவைப்படும் ஆவணங்களுடன் பதிவேற்றம் செய்து முகாம் நடைபெறும் நாளன்று விண்ணப்பத்தின் நகல் மற்றும் ஆவணங்களுடன் கலந்து கொள்ள வேண்டும். விண்ணப்ப நகல், மாணவ, மாணவியர் மற்றும் பெற்றோரின் இரண்டு புதிய புகைப்படம், வங்கி கணக்கு, புத்தக நகல், ஆண்டு வருமானச் சான்று நகல், சாதிச் சான்று நகல், பான் கார்டு நகல், ஆதார் அட்டை நகல், கல்விக் கட்டண விபரம், பத்தாம் வகுப்பு, பிளஸ் 2 மற்றும் இளநிலை பட்டப் படிப்பின் மதிப்பெண் சான்றிதழ்கள், முதல் பட்டதாரியாக இருப்பின் அதற்கான சான்று மற்றும் கலந்தாய்வு மூலமாக பெறப்பட்ட சேர்க்கைக்கான ஆணை போன்ற ஆவணங்களுடன் கலந்து கொள்ள வேண்டும்.

இதில் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மற்றும் தனியார் வங்கிகள் கலந்து கொண்டு மாணவர்களின் விண்ணப்பங்களைப் பெற்று கல்விக் கடன் வழங்க மாவட்ட முன்னோடி வங்கி மூலம் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. எனவே திருப்பூர் மாவட்டத்தைச் சேர்ந்த மாணவ, மாணவிகள் இந்த அரிய வாயிப்;பினைப் பயன்படுத்தி உரிய சான்றுகளுடன் முகாமில் கலந்து கொண்டு கல்விக் கடன் பெற்று பயன்பெற வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது. மேலும் விவரங்கள் அறிய மாவட்ட முன்னோடி வங்கி மேலாளரை தொடர்பு கொள்ளவும். 04212971185. இவ்வாறு மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.மனிஷ் நாரணவரே,இ.ஆ.ப. ,அவர்கள் தெரிவித்துள்ளார்கள்

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161